**S.C. No. 310 / 2023**
**PW1 – Tmt. Sivaranjani**
**28.04.2026**
**(Accused Present)**
சாட்சி மனுவின் பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை :**

**நேரம் 12.20 மணி**

எதிரி பன்னீர்செல்வம் எனக்கு எத்தனை நாளாக தெரியும் என்றால் சம்பவம் நடக்கும்போது தான் தெரியும். அதற்கு முன்பதாக அவரை எனக்கு தெரியாது. அவர் பெயர் பன்னீர்செல்வம் என்று எப்படி தெரியும் என்றால் என்னை அடிக்கும்போது நான் கேட்டேன் அவர் என் பெயர் பன்னீர்செல்வம் குப்பத்து ஆள் என்று கூறினார். நான் கொடுத்த புகாரை யார் எழுதியது என்றால் DSP மேடம் எழுதினார்கள். எழுதியதை படித்து காட்டினார்களா என்றால் படித்து காட்டினார்கள். புகாரில் என்ன உள்ளது என்ற முழுவிவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். எதிரி சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்திற்கு வந்தபோது என்ன சட்டை போட்டிருந்தார் என்றால் கட்டம் போட்ட சட்டை போட்டிருந்தார். அந்த விவரத்தை நான் புகாரில் கூறினேனா என்றால் போலீசார் விசாரிக்கும்போது கூறினேன். சம்பவம் நடந்ததாக சொல்லும் இடம் நான் வசிக்கும் பகுதியல்ல என்றால் சரிதான். என் அண்ணன் மீன்பிடி தொழில் செய்து வருகிறார். என் வீட்டில் இயற்கை உபாதையை கழிக்க  இடம் கிடையாது. இயற்கை உபாதையை கழிக்க சென்றேன். சம்பவம் பற்றி என் அண்ணன் கார்த்திக்-க்கு தெரியுமா என்றால் மருத்துவமனையில் வைத்து கூறினேன். என் அண்ணன் என்னுடன் காவல் நிலையம் வந்தாரா என்றால் மருத்துவமனையில் என்னுடன் இருந்தார். நான் காவல் நிலையம் சென்றேனா என்றால் போகவில்லை. நான் சீரியஸாக இருந்தேன் என்று மருத்துவமனையில் இருந்தேன். 23-04-2021 அன்று மாலை 3.00 மணிக்கு நான் இயற்கை உபாதையை கழிக்க சென்றபோது பழவேற்காடு முள்தோப்பு கழிவு நீரும் கடலும் ஒன்றாக சேருமிடம் முள்புதரில் என் முடியை பிடித்து என் தலையில் அடித்து, என் வாயில் குத்தி, என் நைட்டியை கழித்து

தவறாக நடந்துகொண்டார் என் துணியை கிழித்து என் மீது ஏறி உட்கார்ந்து என்னை கற்பழித்தார் என்று போலீசாரிடம் கொடுத்த புகாரிலும், வாக்குமூலத்திலும் கூறினேனா என்றால் கூறினேன். நான் அவ்வாறு போலீசார் விசாரணையில் கூறவில்லை என்றாலும் நீதிமன்றத்தில் முதன்முதலாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் என் பிராவையும், ஜட்டி, நைட்டியும் கழித்து எறிந்துவிட்டார் என்று போலீசாரிடம் கொடுத்த புகாரிலும், வாக்குமூலத்திலும் கூறினேனா என்றால் கூறினேன். முதல் விசாரணையில் நான் கத்தியவுடன், என் கழுத்தில் குத்தினார், நீ இருளர் சாதி பெண் என்று கூறி என்னை மறுபடியும் அடித்தார் என்ற கூறிய விவரத்தை போலீசாரிடம் கொடுத்த புகாரிலும், வாக்குமூலத்திலும் கூறினேனா என்றால் கூறினேன். முதல் விசாரணையில் என்னை கழிவு நீர் பாண்டில் சேற்றில் போட்டு காலால் என்னை அமுக்கினார், பின்னர் முள்புதரில் தூக்கி அடித்தார் பின்னர் என் காலை பிடித்து தரவரவென்று இழுத்து முள்புதரில் போட்டுவிட்டார் என்ற விவரத்தை போலீசாரிடம் கொடுத்த புகாரிலும், வாக்குமூலத்திலும் கூறினேனா என்றால் கூறினேன். முதல் விசாரணையில் நான் செத்து விட்டேன் என்று நினைத்து என்னை முள்புதரில் போட்டுவிட்டார் என் முதுகு, தொடை, கால் எல்லாம் முள் காயம் ஆகிவிட்டது என்காதில் இருந்த கம்மல், என் மூக்கில் இருந்த மூக்குத்தியை எடுத்து சென்று விட்டார் என்ற விவரத்தை போலீசாரிடம் கொடுத்த புகாரிலும், வாக்குமூலத்திலும் கூறினேனா என்றால் கூறினேன். முதல் விசாரதணையில் நினைவு தெரிந்தவுடன் அருகிலிருந்த குப்பை தொட்டியில் இருந்த ஸ்கூல் யுனிபார்ம்போட்டு என் உடம்பை மறைத்துக்கொண்டு அருகில் இருந்த படகினுள் படுத்துக்கொண்டேன் என்ற விவரத்தை போலீசாரிடம் கொடுத்த புகாரிலும், வாக்குமூலத்திலும் கூறினேனா என்றால் கூறினேன். என் முதல் விசாரணையில் அந்த ஊரைச்சேர்ந்த ஜெய்சங்கர் என்ற அண்ணன் வந்தார் அவரிடம் என் தங்கையை கூப்பிடுமாறு கூறினேன் ஜெய்சங்கர் என் சித்தி பெண் அங்கம்மாவை யாரோ ஒரு பெண் படகில் விழுந்து கிடக்கிறார் என்று கூறி ஊர்காரர்களை அழைத்துக்கொண்டு வந்தார் என்ற விவரத்தை

போலீசாரிடம் கொடுத்த புகாரிலும், வாக்குமூலத்திலும் கூறினேனா என்றால் கூறினேன். எவ்வளவு நாள் மருத்துவமனையில் இருந்தேன் என்றால் சுமார் 1 வாரம் இருந்திருப்பேன். எனக்கு சரியாக ஞாபகமில்லை. நான் மருத்துவமனையில் இருந்தபோது புகாரில் சம்பவம் நடந்து 3ஆவது நாள் என்னிடம் கையொப்பம் வாங்கினார்களா என்றால் DSP மேடம் 3ஆவது நாள் கையொப்பம் வாங்கினார்கள். அப்போது நான் மருத்துவமனையில் தான் இருந்தேன். சம்பவம் நடந்து 3 ஆவது நாள் போலீசார் வந்து பார்த்தார்கள் என்றால் அதற்கு முன்பதாகவும் வந்து பார்த்தார்கள். நான் பழவேற்காடு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சென்றபோது மருத்துவரிடம் நான் கற்பழிக்கப்பட்ட விவரத்தை கூறினேனா என்றால் கூறவில்லை ஆனால் போலீசார் என்னுடன் தான் இருந்தார்கள். பொன்னேரி அரசு மருத்துவமனையில் மருத்துவரிடம் கூறினேன் என்றால் சரிதான். பொன்னேரி அரசு மருத்துவமனையில் எனக்கு யாரால் காயம் எவ்வாறு ஏற்பட்டது என்ற விவரத்தை மருத்துவரிடம் கூறினேனா என்றால் அப்போது நான் பேசும் நிலையில் இல்லை. இருந்தாலும் நான் கூறினேன். போலீசார் கூட இருந்தார்கள். நடந்த விவரத்தை மருத்துவரிடம் கூறினேன். பழவேற்காடு மருத்துவமனைக்கு சென்றபோது பன்னீர்செல்வம் என்னை கற்பழித்தார் என்ற விவரத்தை மருத்துவரிடம் கூறினேனா என்றால் பெயர் சொல்லவில்லை. தெரிந்த நபர், தெரியாத நபர் என்று மருத்துவரிடம் கூறினேனா என்றால் தெரியாத நபர் தான் என்னை கற்பழித்ததாக கூறினேன். என்னை பழவேற்காடு மருத்துவமனைக்கு யார் அழைத்து சென்றது என்றால் என் தங்கையும், என் அண்ணன் ஜெய்சங்கர் அழைத்து சென்றார்கள். அவர்கள் என்னை பழவேற்காடு அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்லவில்லை என்றால் சரியல்ல. முள்செடிக்கு உள் வைத்தா கற்பழித்தாரா அல்லது மேலே முள்செடி இருந்தது உள்ளே பாண்டு பள்ளம் இருந்தது பள்ளத்தில் வைத்து என்னை கற்பழித்தார். நான் கொடுத்த புகாரிலும், போலீசார் விசாரணயிலும் நான் போட்டிருந்த நைட்டி, ஜட்டி, பிரா கலர் நான் கூறினேனா என்றால் கலர் குறித்து கூறவில்லை. நான் கொடுத்த புகாரிலும், போலீசார் விசாரணயிலும் என்

பிராவையும், ஜட்டியையும் கிழித்துவிட்டு என்னை கற்பழித்தார் என்று கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். நான் கொடுத்த புகாரிலும், போலீசார் விசாரணயிலும் சிறிது நேரம் கழித்து நான் சுதாரித்துக்கொண்டு அருகில் கிடந்த துணிகளை எடுத்து சுற்றிக்கொண்டு வீட்டிற்கு போகும்போது அருகில் ஜெய்சங்கர் அண்ணன் வந்தார் என்றால் அவரிடம் நடந்ததை கூறினேனா என்றால் இல்லை. படகில் படுத்துக் கொண்டிருந்தேன் அருகில் யாரோ வந்தார்கள் அருகில் வராதீர்கள் நான் துணி சரியாக போர்த்தவில்லை என் தங்கையை கூப்பிடுங்கள் என்று கூறினேன். ஊரில் உள்ள அனைவரும் வந்துவிட்டார்கள். சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடத்தில் ஜெய்சங்கர் அண்ணன் வந்த பிறகு தான் அவரிடம் சம்பவம் குறித்து கூறினேன் என்றால் சரிதான்.நான் கொடுத்த புகாரிலும், போலீசார் விசாரணையிலும் நான் சம்பவத்தன்று நைட்டி போட்டிருந்ததாக கூறியுள்ளேன் என்றால் நைட்டி, ஜட்டி, பிரா போட்டிருந்ததாக கூறியிருந்தேன். பச்சை நிற பாவாடை அணிந்திருந்ததாக போலீசாரிடம் கூறினேனா என்றால் இல்லை. அது ஸ்கூல் யுனிபார்ம் ஆகும். வீட்டிற்கு போகும் போது அதை போர்த்தியிருந்தேன். நைட்டி மீது வேறு ஏதாவது பாவாடை போட்டிருந்தேனா என்றால் இல்லை. வெள்ளை நிறத்தில் கருப்பு கோடு போட்ட சட்டை சம்பவயிடத்தில் இருந்ததா என்றால் அதை நான் பார்க்கவில்லை. எனக்கு எந்த வேலையும் கிடையாது வருமானமும் கிடையாது என்றால் சரிதான். அவ்வப்போது கூலி வேலைக்கு செல்வேன். ஜெய்சங்கர் அண்ணனிடம் வைரவன் குப்பத்தை சேர்ந்த ராஜேந்திரன் மகன் பன்னீர்செல்வம் என்னிடம் தவறாக நடந்து கொண்டார் என்று கூறினேன் என்றால் பன்னீர் செல்வம் என்னிடம் தவறாக நடந்து கொண்டார் என்று கூறினேன். 26-07-2021 அன்று நீதித்துறை நடுவரிடம் வாக்குமூலம் கொடுத்த வாக்குமூலத்தில் 22-04-2021 அன்று மதியம் 3.00 மணிக்கு Forest முள்புதர் அருகே நான் பாத்ரூம் போவதற்காக போன போது யாரோ வருவதுமாதிரி சத்தமாக இருந்தது யாரோ ஒரு ஆள் நின்றிருந்தார் நான் திரும்பி பார்த்து யார் நீங்கள் என்று கேட்டதற்கு அவர் என் பெயரை கேட்டார் நான் எதற்கு என் பெயரை சொல்லனும் என்று திரும்பி

போகும் போது அவர் என் தலை முடியை பிடித்து இழுத்தார் என்று கூறினேனா என்றால் கூறினேன். மேற்படி விவரத்தை போலீசார் வாக்குமூலத்திலும், புகாரிலுமம் கூறவில்லை என்றால் கூறினேன். நீதித்துறை நடுவரிடம் வாக்குமூலம் கொடுத்த வாக்குமூலத்தில் வா நாம தப்பு செய்யலாம் என்று கூப்பிடடார் நான் அவரை தள்ளிவிட்டு கத்தினேன், யாராவது காப்பாற்ற வருவார்கள் என்று கததினேன், அங்கு யாருமில்லை தள்ளிவிட்டு ஒடலாம் என்று நினைத்தேன் ஆனால் என் முகத்தில் அவன் குத்தி கழுத்தை நெரித்தான் அப்புறம் நான் அவனை தள்ளிவிட்டேன் என்று சொல்லி கீழே தள்ளி கால் மற்றும் வயிற்றின் மீது எட்டி உதைத்தான் என்று கூறியுள்ளனா என்றால் கூறியுள்ளேன், அவ்வாறு புகாரிலும், வாக்குமூலத்திலும் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். நடுவரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் என் உடைகளை முழுதாக கிழித்து நான் அவரை அடித்துக்கொண்டிருந்ததால் உன் கண் இருந்தா தன பாக்குற என்று சொல்லி கண்ணில் கீறிட்டார் என்றும் என்னிடம் தவறாக நடந்து கொண்டார் என்று கூறியுள்ளனா என்றால் கூறியுள்ளேன், அவ்வாறு புகாரிலும், வாக்குமூலத்திலும் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். நடுவரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் கழுத்தை பிடித்து சேற்றில் நசுக்கி கீழ் ஜாதி நாயே சாவு என்று சொல்லி சேற்றில் பிடித்து நசுக்கினார் நான் அப்புறம் மயங்கிவிட்டேன், பின்னர் கொஞ்ச நேரம் கழித்து நான் எழுந்து பார்த்தால் என் உடம்பில் ஒரு டிரஸ் கூட இல்லை இரத்தபோக்கு அதிகமாக இருந்தது, என்னை ஒரு முள்புதரில் நான் செத்துவிட்டேன் என்று நினைத்து என்னை தூக்கி போட்டார் என்ற விவரத்தை என்று கூறியுள்ளனா என்றால் கூறியுள்ளேன், அவ்வாறு புகாரிலும், வாக்குமூலத்திலும் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். நடுவரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் எனக்கு மயக்கம் தெளிந்த பிறகு அங்கு யாரோ கத்திக்கொண்டு இருந்தார் கொஞ்ச நேரம் கழித்து அந்த பையன் வேறு யாரோ 2 பெண்ணை துரத்தி அதனால் ஊர் மக்கள் அவனை விசாரித்துக் கொண்டிருந்தார்கள் அதற்கு அவன் நான் சும்மா தான் வந்தேன், சாவி தேடுறேன் என்று பொய் சொல்லிட்டு இருந்தான் என்று தெரிந்துகொண்டேன் என்ற விவரத்தை கூறியுள்ளனா

என்றால் கூறியுள்ளேன், அவ்வாறு புகாரிலும், வாக்குமூலத்திலும் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். நடுவரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் கொஞ்ச தூரத்தில் ஒரு படகு இருந்தது அங்கிருந்த ஒரு சின்ன டிரஸ் எடுத்து போட்டுட்டு ஒரு அண்ணா கிட்ட என் அம்மா அங்கம்மா, சித்தி குட்டியம்மா பெயரை சொல்லி அவர்களை அங்க கூட்டி வரசொன்னேன் என்ற விவரத்தை கூறியுள்ளனா என்றால் கூறியுள்ளேன், அவ்வாறு புகாரிலும், வாக்குமூலத்திலும் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். நடுவரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் அப்புறம் அங்கு எல்லோரும வந்தார்கள் என்னை யார் இப்படி பண்ணது என்று கேட்டார்கள், எனக்கு அவர் பெயர் தெரியாது என்று சொன்னேன், கும்பலில் ஒரு அண்ணா இருந்தார் அந்த அண்ணா இந்த பையனா பாரு, போட்டோ காட்டினார் இந்த பையன் தான் அண்ணா என்று சொன்னேன் உடனே அவர்கள் போலீஸ் ஸ்டேஷனுக்கு தகவல் சொன்னார்கள் என்று கூறியுள்ளனா என்றால் கூறியுள்ளேன், அவ்வாறு புகாரிலும், வாக்குமூலத்திலும் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். சம்பவம் நடந்ததற்கும் நீதித்துறை நடுவரிடம் கொடுத்த வாக்குமூலத்திற்கு இடையே 3 மாத கால இடைவெளி இருக்குமா என்றால் இருக்கும். காவல் நிலையத்தில் போட்டோ காட்டினார்களா என்றால் ஜெய்சங்கர் அண்ணா போட்டோ காட்டினார். சம்பவம் நடந்த பிறகு 3 மாதம் கழித்து வாக்குமூலம் கொடுக்கும்போது சம்பவயிடத்தில் ஒரு போட்டோ காட்டினார்கள் அவர் தான் என்னிடம் தவறாக நடந்துகொண்டார் என்று நடுவரிடம் கூறினேனா என்றால் இல்லை. அவர்கள் எந்த ஒரு போட்டோவும் காட்டவில்லை. ஜெய்சங்கர் அண்ணா தான் இருளர் சங்க தலைவர் என்றால் சரிதான். நடுவரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் முகம் முழுக்க எனக்கு காயம் ஆகிவிட்டது, மூக்கிலிருந்து இரத்தம் வந்துவிட்டது, உடம்பு முழுவதுமாக கீறல் காயம் ஆகிவிட்டது, என்னை முள்ளில் போட்டு புரட்டினான் அவன் பெயர் பன்னீர் செல்வம் என்று அப்புறம் தெரிந்து கொண்டேன் என்று நீதித்துறை நடுவரிடம் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன், அவ்வாறு புகாரிலும், வாக்குமூலத்திலும் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். நான் கொடுத்த புகாரிலும் போலீசாரிடம் கொடுத்த வாக்குமூலத்தல்

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திலிருந்து சிறிது நேரம் கழித்து சுதாரித்துக்கொண்டு அருகில் கிடந்த துணிகளை எடுத்து சுத்திக்கொண்டு வீட்டிற்கு செல்லும்போது வழியில் ஜெய்சங்கர் அண்ணா வந்த விவரத்தை நீதித்துறை நடுவர் வாக்குமூலத்தில் கூறினேனா என்றால் கூறவில்லை. அப்போது படகில் படுத்திருந்தேன். துணியை போர்த்திக் கொண்டு என்னை தூக்கிக் கொண்டு சென்றார்கள். என் அண்ணன் கார்த்தியை இந்த வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். எங்கள் பகுதியை சேர்ந்த ராஜா, ஆனந்த் ஆகியோர் இந்த வழக்கு விஷயமாக எனக்கு அனுசரனையாக காவல் நிலையம் வந்தார்களா என்றால் ராஜா மட்டும் வந்தார். ராஜா, ஆனந்த் ஆகியோர் இருளர் சமூகத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். இந்த வழக்கில் சாட்சியாக உள்ள செஞ்சியம்மாள் என்னுடைய தாயார் என்றால் சரிதான். அங்கம்மாள் என்பவர் என்னுடைய சித்தியின் மகள் என்றால் சரிதான். கன்னியம்மாள் என் அண்ணா என்றால் சரிதான். தூரத்து உறவு. சாட்சி வினோதினி எனக்கு தூரத்து சொந்தம். வினோதினியின் கணவர் யார் என்றால் ஜெய்சங்கர். சம்பவம் நடந்த பிறகு ஊரில் உள்ளவர்கள் புகார் கொடுக்க வேண்டாம் என்று கூறினார்கள் என்றால் சரியல்ல. புகார் கொடுக்க வேண்டும் என்று தான் கூறினார்கள். புகார் கொடுப்பதற்கு முன்பதாக என்னை மருத்துவமனைக்கு அழைத்து சென்றவர் ஜெய்சங்கர் என்றால் சரிதான். புகார் கொடுத்து இந்த வழக்கை நடத்தவேண்டும் என்று ஜெய்சங்கர் எனக்கு ஆலோசனை வழங்கினார் என்றால் சரிதான். எங்கள் பகுதியை சேர்ந்தவர்கள் இயற்கை உபாதையை கழிக்க சம்பவயிடத்திற்கு தான் செல்வார்கள் என்றால் சரிதான். அங்கு தான் புதர் இருக்கும். அந்த புதரில் ஆண்கள் ஒரு பக்கமும், பெண்கள் ஒரு பக்கமும் இயற்கை உபாதையை கழிக்க செல்வார்கள் என்றால் சரிதான். அங்கு ஜன நடமாட்டம் இருக்கும் என்றால் சரிதான். பெண்கள் இயற்கை உபாதையை கழிப்பதற்கு செல்லும்போது அங்கு பெண்கள் யாராவது இருந்தார்களா என்றால் இல்லை. நான் சென்ற நேரம் தண்ணீர் குழாயில் வந்ததால் ஊரில் வந்ததால் எல்லோரும் தண்ணீர் பிடிக்க போயிருந்தார்கள். நான் இயற்கை உபாதையை கழித்த பிறகு சம்பவம் நடந்ததா

என்றால் நான் இயற்கை உபாதையை கழித்துவிட்ட பிறகு தான் சம்பவம் நடந்தது. மேற்படி விவரத்தை நான் நடுவரிடம் கூறினேனா என்றால் கூறினேன். எங்கள் பகுதியை சேர்ந்த 10 பெண்கள் துடப்பகட்டையால் என்னை அடித்தார்கள் என்றால் சரியல்ல. என்னை எதற்காக அடிக்கபோகிறார்கள். நான் ஒரு பையனிடம் பேசிக்கொண்டிருந்தேன் ஆகவே தான் பிரச்சனை ஏற்பட்டது என்று சொல்லி அடித்தார்கள் என்றால் தவறு. எதிரி நான் ஒருவருடன் புதரில் பேசிக்கொண்டிருந்ததை பார்த்து ஊர் ஜனங்களை அழைத்து வந்தார் என்றால் சரியல்ல. எதிரி ஊர்மக்களை அழைத்து வந்ததால் ஜெய்சங்கர் தூண்டுதலின் பேரில் எதிரி மீது பொய்யாக வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. உண்மையிலேயே சம்பவம் நடந்திருந்தால் ஊர்மக்கள் அன்றைய தினமே புகார் கொடுத்திருப்பார்கள் என்றாலும் ஜெய்சங்கர் தூண்டுதலின் பேரில் 3 நாட்கள் கழித்து புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் என்ன ஜாதி எதிரி என்ன ஜாதி என்று சம்பவத்திற்கு முன்பதாக தெரியாது என்றால் சரிதான். ஊர்மக்கள் வந்து என்னை அடித்து சேற்றில் புரட்டியதால் எதிரி மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் எதிரி எந்த தவறும் செய்யவில்லை என்றால் சரியல்ல.

**நேரம் 13.30 மணி**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.

**<u>S.C. No. 310 / 2023</u>**

**PW2 – Thiru. Jaishankar S/o. Raja**

**28.04.2026**

**(Accused Present)**

<u>சாட்சி மனுவின் பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.</u>

**<u>குறுக்கு விசாரணை :</u>**

**நேரம் 14.47 மணி**

புகார் கொடுத்த சிவரஞ்சனி இருளர் சமுதாயத்தை சேர்ந்தவர், நானும் இருளர் சமுதாயத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். சிவரஞ்சனி என் உறவினரா என்றால் தூரத்து சொந்தம், எங்கள் ஊரைச் சேர்ந்தவர். நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் மீன் பிடிக்கும் தொழில் செய்து வருகிறேன். நான் எங்கள் பகுதியில் தலைவராக இருந்து மக்களுக்கு நல்லது செய்வேன் என்றால் சரிதான். பன்னீர்செல்வம் சம்பந்தப்பட்ட விஷயம் என் மனைவிக்கு எப்போது தெரியும் என்றால் மருத்துவமனைக்கு செல்லும்போது மாலையில் தெரியும். என் முதல் விசாரணையில் ஆஜர் எதிரியை தெரியும் என்று கூறியுள்ளேன், போலீசார் என்னை விசாரித்தபோது எதிரியை தெரியும் என்று கூறினேனா என்றால் கூறினேன். என் முதல் விசாரணையில், 23-04-2021 அன்று மாலை 3.00 மணிக்கு மேல் உப்புக்கழிவரம் அந்த இடத்தில் ஒரு பெண் பழைய துணிகளை போர்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார் நான் அருகில் சென்று பார்த்தபோது எங்கள் ஊரைச் சேர்ந்தவர் சிவரஞ்சனி ஆவார் என்று போலீசார் விசாரணையில் கூறினேனா என்றால் கூறினேன். நான் போலீசார் விசாரணையில் கூறவில்லை என்றாலும் நீதிமன்றத்தில் முதல்முறையாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்ற முதல் விசாரணையில் நான் அவரை விசாரித்தபோது அப்போது பாத்ரூம் போகும்போது ஒருவர் பின்னால் இருந்து அடித்து நைட்டி, பிரா, ஜட்டியை கிழித்து அவர் கத்தியவுடன் முகத்தில் அடித்து, முகத்தில் குத்தி, தொண்டையில் குத்தி சிவரஞ்சனியை கற்பழித்தார், அவரை மிரட்டி அந்த குளம்கழிவுநீர் தண்ணீரில் அவர் முகத்தை வைத்து அழுத்தி பிடித்துக்கொண்டிருந்தார் என்றும், அவர் இறந்திருப்பார் என்று விட்டுவிட்டு சென்றதாகவும், பின்னர் அந்த பெண்

எழுந்ததாகவும் என்னிடம் கூறினார் என்ற விவரத்தை போலீசார் விசாரணையில் கூறினேனா என்றால் கூறினேன். நான் அவ்வாறு கூறவில்லை என்றாலும் நீதிமன்றத்தில் முதன்முறையாக கூறியுள்ளேன் என்றாலும் சரியல்ல. என் முதல் விசாரணையில் அம்மணமாக அந்த போட்டில் இருந்த பழைய துணியை அணிந்திருந்தார், நான் ஊரிலிருந்து அங்கம்மாவை அழைத்து வந்த விவரத்தை கூறியுள்ளேன். என் முதல் விசாரணையில் பின்னர் பழவேற்காடு அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று சிவரஞ்சனிக்கு என்ன நடந்தது என்ற விவரத்தை மருத்துவரிடம் கூறினேனா என்றால் கூறினேன். அவர்கள் போலீசாருக்கு போன் செய்திருந்தார்கள். மருத்துவரிடம் பாத்ரூம் போகும்போது பின்னால் இருந்து வந்து யாரோ கற்பழித்துவிட்டார் என்று கூறினேன். என் முதல் விசாரணையில் மறுநாள் DSP சம்பவயிடத்தை காட்ட கூறிய விவரத்தை போலீசார் விசாரணையில் கூறினேனா என்றால் கூறினேன். சம்பவம் நடந்த இடத்தை எத்தனை மணிக்கு காட்டினேன் என்றால் மறுநாள் போலீசார் வந்தவுடன் காட்டினேன். மறுநாள் வந்தார்கள். நேரம் சரியாக ஞாபகமில்லை. இந்த வழக்கு சம்பந்தமாக சம்பவம் நடந்த அன்று காவல் நிலையத்தில் தகவல் கூறினேனா என்றால் அன்று இரவே போலீசாருக்கு தகவல் கூறினேன். நான் எழுத்து மூலமாக புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. மருத்துவமனையில் கூறியபோது மருத்துவமனையிலிருந்து போலீசாருக்கு போன் செய்து போலீசாரை வரவழைத்தார்கள். சம்பவம் நடந்த இடம் திருப்பாலைவனம் காவல் நிலையத்திற்கு உட்பட்ட இடம் என்றால் சரிதான். திருப்பாலைவனம் காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்து அவர்கள் என்னை விசாரணை செய்தார்களா என்றால் நான்புகார் கொடுக்கவில்லை. ஆனால் திருப்பாலைவனம் காவல் நிலையத்தில் என்னை விசாரித்தார்கள். திருப்பாலைவனம் காவல் நிலையத்தில் தகவல் கொடுத்தபோது அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் மகளிர் காவல் நிலையத்தில் தான் வழக்கு எடுக்க வேண்டும் என்று கூறினார்கள். திருப்பாலைவனம் காவல் நிலையத்தில் சம்பவம் குறித்து முதல் தகவல் அறிக்கை நகல் கொடுத்தார்களா என்றால் கொடுத்தார்கள். சம்பவம் நடந்தபோது சம்பவத்தில்

ஈடுபட்டவரின் பெயர் எனக்கு தெரியுமா என்றால் சிவரஞ்சனி சொல்லி தான் எனக்கு தெரியும். சிவரஞ்சனிக்கு எதிரியின் பெயர் எவ்வாறு தெரியும் என்றால் சிவரஞ்சனியிடம் போன் நம்பர் கேட்டு அடித்துள்ளார். பின்னர் பன்னீர்செல்வம் அவருடைய பெயரை சிவரஞ்சினியிடம் கூறியுள்ளார். பின்னர் தான் நாங்கள் எதிரியின் போட்டோவை சிவரஞ்சனியிடம் காட்டினோம். சம்பவம் நடந்தபோது எதிரி என் தம்பியின் உடன்படித்தவர் ஆவார். மேற்படி விவரத்தை போலீசார் விசாரணையில் கூறினேனா என்றால் கூறினேன். அவ்வாறு நான் கூறவில்லை என்றாலும் முதன் முறையாக நீதிமன்றத்தில் கூறுகிறேன் என்றால் சரியல்ல. காவல்நிலையத்திற்கு வழக்கு விஷயமாக எத்தனை முறை சென்றேன் என்றால் சம்பவம் நடந்த அன்று நான் காவல்நிலையம் சென்றேன், அப்போது என்னை விசாரித்தார்கள், மறுநாளும் என்னை விசாரித்தார்கள். நான் கையொப்பம் எங்கு வைத்து போட்டேன் என்றால் லோக்கேஷன் வரைந்து சம்பவயிடத்தில் வைத்து மறுநாள் படம் வரைந்தார்கள் அப்போது கையொப்பமிட்டேன். யார் படம் வரைந்து எழுதினார்கள் என்றால் DSP யுடன் 2 போலீசார் வந்திருந்தார்கள். அதில் ஒருவர் வரைந்து கொண்டிருந்தார். DSP யுடன் 2 போலீசார் சீருடையில் தான் வந்தார்கள். DSP எழுதினாரா என்றால் DSP சொல்ல சொல்ல மற்ற ஒரு போலீசார் எழுதினார். DSP கைப்பட எழுதவில்லை என்றால் படம் ஒருவர் வரைந்தார், எழுதியது ஒரு மேடம் ஆகும். எந்த இடத்தில் வைத்து எழுதினார்கள் என்றால் பாண்டுள் வைத்து சம்பவயிடத்தை பார்த்து வரைந்து, எழுதினார்கள். என் வீட்டருகே வரவில்லை. யார் வீட்டருகிலும் வரவில்லை. ரோடு அருகில் வைத்து எழுதினார்கள். கையில் பேட் வைத்து எழுதினார்கள். அது எழுதி முடிக்க எவ்வளவு நேரம் ஆனது என்றால் அவர் வந்து எழுதி முடிக்க ஒரு மணி நேரம் ஆனது. நான் எத்தனை மணிக்கு கையொப்பமிட்டேன் என்றால் சுமார் 12.00 மணியிருக்கும். சம்பவயிடத்தில் சிவரஞ்சனியில் நைட்டி, ஜட்டி, பிரா ஆகியவற்றை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன். நைட்டி, ஜட்டி, பிரா ஆகியவற்றை DSP கைப்பற்றினாரா என்றால் கைப்பற்றினார். பார்வை மகஜரில் சம்பவம் முள்புதருக்கள் நடந்தது அல்லது முள்புதருக்கள் வெளியில் நடந்ததா என்றால்

முள்புதருக்கு உள்பக்கம் நடந்தது. பார்வைமகஜரில் மாதிரி வரைபடத்திலும் சம்பவம் குளத்தை ஒட்டி தான் முள்புதர் உள்ளது. மாதிரி வரைபடத்தில் என்னனென்ன காட்டியுள்ளார்கள் என்றால் குளம் வரைந்திருந்தார்கள், படகை வரைந்திருந்தார்கள், பாதை, சைடில் முள்புதர் வரைந்திருந்தார்கள். சம்பவயிடத்திற்கு அருகில் பெரிய பில்டிங் வரைந்திருந்தார்களா என்றால் இல்லை. பார்வை மகஜரில் சம்பவம் நடந்த இடத்திற்கு அருகில் என்னென்ன இருப்பதாக சொல்லியுள்ளார்கள் என்றால் அந்த பெண்ணின் நைட்டி, ஜட்டி, பிரா ஆகியவை இருந்ததை குறிப்பிட்டார்கள். வேறு எதுவும் குறிப்பிடவில்லை. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அது என்னுடைய கையொப்பம் இல்லை என்றாலும் போலீசார் கையொப்பம் போட்டுக் கொண்டார்கள் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த அன்று என்னை போலீசார் விசாரித்தார்கள். மறுநாள் என்னை போலீசார் விசாரித்தார்கள் அதன்பின்னர் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் சாட்சியாக உள்ள சின்னராசு, ராஜா, ஆனந்த், செஞ்சியம்மா, கன்னியம்மாள், அங்கம்மாள், வினோதினி ஆகியோர் என்னுடைய உறவினர்களா என்றால் சரிதான். அந்த ஊரில் உள்ள அனைவரும் என்னுடைய உறவினர்கள். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் மைதானத்தில் பெண்கள் ஆண்கள் என இயற்கை உபாதையை கழிக்க இடம் உள்ளதா என்றால் இடது பக்கம் பெண்கள் இயற்கை உபாதையை கழிக்க செல்வார்கள், வலது பக்கம் ஆண்கள் இயற்கை உபாதையை கழிக்க செல்வார்கள். எங்கள் ஊரையை ஒட்டியவாறு தான் அந்த இடம் உள்ளது என்றால் சரிதான். அதற்கு அருகில் Forest Office Compound உள்ளது என்றால் சரிதான். அதனுள் Forest Office ஆட்கள் இருப்பார்கள் அது 8 ஏக்கர் இடம் ஆகும். ரோட்டை ஒட்டி இடது பக்கம் Forest Office, வலது பக்கம் எங்கள் ஊர் என்றால் சரிதான். இரண்டையும் குறுக்கில் இருக்கும் ரோடு தான் பிரிக்கிறது என்றால் சரிதான். நான் சம்பவயிடத்திற்கு செல்லும்போது சுமார் மாலை 3.00 மணிக்குமேல் இருக்கும். அங்கு நான் பார்க்கும்போது சிவரஞ்சனியின் உடம்பு முழுவதும் சேறாக இருந்தது என்றால் சரிதான்.

சிவரஞ்சனிக்கு காயம் ஏதாவது இருந்ததா என்றால் முகத்தில் வீங்கி போய் ரத்தம் வந்து கொண்டிருந்தது. அருகில் வந்து பார்த்தபோது அவர் உடம்பில் துணியில்லை என் தங்கையை வரக்கூறினேன். வீட்டிற்கு வந்து குளிப்பாட்டி துணி உடுத்தி மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். மேற்கூறிய விவரத்தை போலீசார் விசாரித்தபோது கூறினேனா என்றால் கூறினேன். சிவரஞ்சனிக்கு யார் துணி எடுத்து கொடுத்தது என்றால் போட்டில் பழைய துணி இருந்தது அதை போர்த்தி பாதி அம்மணமாக இருந்தார். அங்கம்மா வீட்டில் போய் குளிப்பாட்டி, அங்கம்மா தங்கை நைட்டியை போட்டு பின்னர் மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். போலீசார் விசாரிக்கும்போது பழைய துணியை போட்டுக்கொண்டு அவர் வீட்டிற்கு வரும்பொழுது என்னை பார்த்ததாகவும் சிவரஞ்சனி அப்போது நடந்த விவரத்தை என்னிடம் கூறினேனா என்றால் அவ்வாறு கூறவில்லை. போட்டில் பழைய துணி போர்த்திருந்ததை பார்த்தாக கூறியுள்ளேன். நான் அவ்வாறு கூறவில்லை என்றாலும் போலீசாரிடம் என் வீட்டருகில் சிவரஞ்சனி பழைய துணியை போர்த்தி என் வீட்டருகே வந்ததை பார்த்தேன் என்று கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் போலீசார் விசாரணையில மேற்படி சம்பவம் குறித்து பதியப்பட்ட வழக்கில் சம்பவயிடத்தை பார்வை யிட்டு பார்வை மகஜர் செய்யப்போவதாகவும், அதற்கு சாட்சியாக இருக்கு என்னையும், சின்னராசு என்பவரையும் சாடசியாக இருக்கும்படி கேட்டுகொண்டார்கள் அதற்கு நாங்கள் சம்மதித்தோம் பின்பு எங்கள் முன்னிலையில் பார்வை மகஜர் தயார் செய்துள்ளீர்கள் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் எந்த தேதியில் எந்த நேரம் என்று சொல்லவில்லை என்றால் ஞாபகமில்லை. இந்த வழக்கில் புகார்தாரருக்கு புகார் கொடுக்க ஆதரவாக இருந்தேன் என்றால் சரிதான். சம்பவயிடத்தை நான் பார்த்ததால் எனக்கு சம்பவயிடம் குறித்து எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். போலீசார் சம்பவயிடத்தை பார்ப்பதற்கு முன்பு சம்பவயிடம் நன்கு தெரியும் என்றால் சரிதான். சின்னராசு அ.சா.1 சிவரஞ்சனிக்கு உறவினரா என்றால் இல்லை. ஆனால் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள். சம்பவம் நடந்ததாக சொல்லும் அன்று சிவரஞ்சனி ஒரு

ஆண் நண்பருடன் புதரில் பேசிக்கொண்டிருந்ததை எதிரி பார்த்துவிட்டு ஊர் பொதுமக்களிடம் கூறினார் என்றாலும் ஊர் மக்கள் சிவரஞ்சனியை துடப்பகட்டையால் அடித்தார்கள் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் சிவரஞ்சனி புகாரில் கையொப்பமிட்டார் என்று தெரியுமா என்றால் மருத்துவமனையில் அவரை சேர்த்தது வரை தெரியும். அதன்பின் அவர் எப்போது கையொப்பமிட்டார் என்று எனக்கு தெரியாது. பொதுமக்கள் சிவரஞ்சனியை அடித்தார்கள் என்றாலும் அது காரணமாக திருப்பாலைவனம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. திருப்பாலைவனம் காவல் நிலையத்தில் எதிரி மீது கொடுத்த புகாரை விசாரித்த காவல் நிலையத்தினர் எதிரி எந்த குற்றமும் செய்யவில்லை பொதுமக்கள் அ.சா.1 ஐ அடித்து காயப்படுத்தினார்கள் என்ற காரணத்தினால் நான் பொய் புகார் கொடுத்துள்ளேன் என்று சொல்லி அவர்கள் புகாரை எடுக்க மறுத்ததால் 3 நாட்கள் கழித்து சில சிபாரிசுகளோடு அ.சா.1 ஐ வைத்து புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் அ.சா.1 மூலம் கொடுத்த புகாரை உறுதிபடுத்துவதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**நேரம் 15.40 மணி**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.

**S.C. No. 310 / 2023**

**PW3 – Thiru. Chinna rasu S/o. Munusamy**

**28.04.2026**

**(Accused Present)**

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை :**

**நேரம் 15.40 மணி**

போலீசார் என்னை விசாரித்தபோது எனக்கும், சிவரஞ்சனிக்கும் என்ற உறவு என்று கூறினேன் என்றால் எந்த உறவுமுறையும் கூறவில்லை. இந்த வழக்கில் தனிப்பட்ட சாட்சியாக வந்துள்ளேன் என்றால் சரிதான். சிவரஞ்சனி எங்கள் ஊரைச் சேர்ந்தவர். என் மனைவி பெயர் என்ன என்றால் கன்னியம்மாள். அவர் இந்த வழக்கில் சாட்சியாக உள்ளார் என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் சிவரஞ்சனி என் மனைவியின் தங்கை என்று கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. அதேபோல் சிவரஞ்சனியின் சொந்த ஊர் எது என்றால் மெதூர் ஆகும். சம்பவம் நடந்தது குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சம்பவம் நடந்து எத்தனை நாட்கள் கழித்து தகவல் வந்தது என்றால் சம்பவம் நடந்த 1 மணி நேரத்தில் தெரியவந்தது. ஜெய்சங்கர் அவருடைய தாயாரிடம் பேசியபோது எனக்கு தெரியவந்தது. சம்பவம் நடந்து எத்தனை நாட்கள் கழித்து போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றால் மறுநாள் விசாரித்தார்கள். எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் Forest Office அருகில் சம்பவயிடத்தில் வைத்து விசாரித்தார்கள். சம்பவயிடத்திற்கு என்னை யார் அழைத்தார்கள் என்றால் யாரும் போலீசார் யாரும் கூப்பிடவில்லை. அனைவரும் ஒரே தெருவை சேர்ந்தவர்கள். ஜெய்சங்கர் என்னை அழைத்தார். ஜெய்சங்கர் எத்தனை மணிக்கு அழைத்தார் என்றால் எனக்கு ஞாபகமில்லை. ஜெய்சங்கர் அழைத்ததால் நான் சென்றேன், அவர் கையொப்பமிட்டதால் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். இந்த வழக்கு விஷயமாக எந்த காவல் நிலையம் சென்றோம் என்றால் மகளிர் காவல் நிலையம் சென்றோம். எத்தனை நாட்கள் கழித்து சென்றோம் என்றால் சம்பவம் நடந்த மறுநாள் காவல் நிலையம் சென்றோம். சம்பவம் 21 ஆம் தேதி நடந்தது,

23 ஆம் தேதி காவல் நிலையம் சென்றோம். மகளிர் காவல் நிலையத்திற்கு யார் யார் சென்றோம் என்றால் ஊர்மக்கள் சென்றோம், நான், கார்த்தி, ராஜா, ஜெய்சங்கர் மற்றும் ஊர் மக்கள் சென்றோம். எங்களை ஊர் நிர்வாகிகள் என்று கூப்பிடுவார்கள். எத்தனை மணிக்கு சென்றோம் என்று ஞாபகமில்லை. ஊரில் என்ன விஷயம் நடந்தாலும் ஊர் நிர்வாகம் தான் பொறுப்பு என்றால் சரிதான். மகளிர் காவல் நிலையத்தில் நான் எத்தனை கையொப்பமிட்டேன் என்றால் அங்கு வைத்து நான் கையொப்பம் எதுவும் போடவில்லை. சம்பவயிடத்தில் வைத்து எத்தனை மணிக்கு கையொப்பமிட்டேன் என்றால் தோராயமாக காலை 8.30 மணிக்கு போட்டேன். நேரம் சரியாக ஞாபகமில்லை. எத்தனை கையொப்பம் போட்டேன் என்றால் ஒரு கையொப்பம் தான் போட்டேன். நான் முதல் விசாரணைக்கு நீதிமன்றம் வருவதற்கு முன்பு என்னுடைய வாக்குமூலத்தை கொடுத்தார்களா என்றால் கொடுத்தார்கள். அதன் பிரகாரம் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் நான் நடந்ததை சாட்சியமாக கூறுகிறேன். முதல் விசாரணை கூறிய விவரத்தை போலீசாரிடம் கூறினேனா என்றால் சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை. நான் கேள்வி பட்ட விவரத்தை முதல் விசாரணையில் கூறிய விவரத்தை போலீசார் விசாரணையில் கூறினேனா என்றால் கூறினேன். அவ்வாறு நான் கூறவில்லை என்றாலும் நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஜெய்சங்கர் என்னிடம் எதுவும் கூறவில்லை. சம்பவயிடத்திற்கு எத்தனை போலீசார் வந்தார்கள் என்றால் DSP வந்தார், உடன் 4, 5 போலீசார் வந்தார்கள். நான் கையொப்பமிட்டதாக சொல்லப்பட்ட ஆவணத்தை யார் எழுதினார்கள் என்றால் எனக்கு அதிகாரிகள் என்று தெரியும் என்ன ரேங்க் என்று தெரியாது. கையொப்பத்தை எங்கு வைத்து போட்டேன் என்றால் சம்பவம் நடந்த இடத்தில் வைத்து போட்டேன். நான் கையொப்பம் போட்ட ஆவணத்தை யார் எழுதினார்கள் என்றால் DSP யுடன் வந்தவர்கள் எழுதினார்கள். நானும், ஜெய்சங்கரும் எங்கு வைத்து கையொப்பமிட்டோம் என்றால் குளம் அருகில் வைத்து கையொப்பம் போட்டோம். ரோடு அருகில் வைத்து கையொப்பம் போடவில்லை என்றால் சரிதான். போலீசார்

சீருடையில் வந்திருந்தார்கள் என்றால் சரிதான். போலீசார் எதில் வந்தார்கள் என்றால் ஜீப்பில் வந்தார்கள். ஜீப்பின் மேல் வைத்து எழுதினார்களா என்றால் இல்லை. கையில் ஒரு பைல் வைத்து எழுதினார்கள். அதை எழுதி முடிக்க எவ்வளவு நேரம் ஆனது என்றால் ஞாபகமில்லை. சம்பவம் நடந்த இடத்தில் சிவரஞ்சனியின் நைட்டி, ஜட்டி, பிரா ஆகியவற்றை பார்த்தேனா என்றால் இல்லை. அவர்கள் என்னென்ன வரைந்தார்கள் என்றால் குளம், படகு, ஆறு ஆகியவற்றை வரைந்தார்கள். எங்கள் வீட்டிற்கும் சம்பவம் நடந்த இடத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் 200 அடி தூரம் இருக்கும். அங்கு யாராவது சத்தம் போட்டால் எங்களுக்கு கேட்கும் என்றால் கேட்காது. அங்கு சத்தம் போட்டால் Forest Office க்கு சத்தம் கேட்காது. எப்போதாவது தான் ஆட்கள் இருப்பார்கள். சத்தம் போட்டால் கேட்குமா, கேட்காதா என்றால் கேட்காது. புதரிலிருந்து ஓ என்று கத்தினால் ஊரில் உள்ளவர்களுக்கு கேட்குமா என்றால் கேட்காது. இது சம்பந்தமாக திருப்பாலைவனம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோம் என்றால் சரிதான். அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். மகளிர் காவல்நிலையத்திற்கு போக சொன்னார்கள். 3 நாட்கள் கழித்து சிவரஞ்சனி கொடுத்த புகார்மீது நடவடிக்கை எடுத்தார்களா என்றால் நடவடிக்கை எடுத்தார்களா என்றே தெரியாது. எதிரியை சம்பவம் நடந்த அன்றே திருப்பாலைவனம் காவல நிலையம் அழைத்து வந்தார்களா என்றால் மறுநாள் திருப்பாலைவனம் காவல் நிலையத்திற்கு அழைத்து வந்தார்கள். திருப்பாலைவனம் காவல் நிலையத்தில் வைத்து எதிரி ஒரு ஆண் நண்பருடன் பேசிக்கொண்டிருந்தார் அதை எதிரி பார்த்துவிட்டு ஊரில் கூறியதாக கூறினாரா என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. சம்பவம் நடந்ததாக சொல்லும் அன்று சிவரஞ்சனி ஒரு ஆண் நண்பருடன் புதரில் பேசிக்கொண்டிருந்ததை எதிரி பார்த்துவிட்டு ஊர் பொதுமக்களிடம் கூறினார் என்றாலும் ஊர் மக்கள் சிவரஞ்சனியை துடப்பகட்டையால் அடித்தார்கள் என்றால் சரியல்ல. ஊர் பொதுமக்கள் சிவரஞ்சனியை அடித்ததால் தான் அவருக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. என்னுடைய மனைவின் சொந்த தங்கை என்பதால்

நான் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அவர் என் மனைவியின் சொந்த தங்கை அல்ல. சிவரஞ்சனி அம்மாவிடம ஜெய்சங்கர் கூறியபோது நான் கேள்விபட்டேன் என்றால் சரிதான். நான் மேற்படி விவரத்தை போலீசார் விசாரணையில் கூறினேனா என்றால் கூறினேன். எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**நேரம் 16.10 மணி**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.